மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 395/2012 | சாட்சி | பி.வா.சா.3 |
| பெயர் | செல்வராஜ் | நாள் | 09.02.2023 |
| தகப்பனார் பெயர் | முனியப்ப கவுண்டர் | | |

**வாதி தரப்பில் பி.வா.சா.3 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

10) 1ம் பிரதிவாதி வையாபுரி எந்த கட்சியை சேர்ந்தவர் என்றால், கம்னியூஸ்ட் கட்சியை சேர்ந்தவர். நானும் கம்னியூஸ்ட் கட்சியை சேர்ந்தவன். என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் வாதி பழனியப்பன் வாய்மொழியாக பாகம் பிரித்த சொத்துக்களில் தனக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் நிலத்தை தனது மகள் ராஜாத்திக்கு சுமார் 15 வருடங்களுக்கு முன்பு கிரயம் செய்து கொடுத்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால், நான் அவ்வாறு சொல்லவில்லை. எனக்கு அதுகுறித்து தெரியாது.

11) நான் பாகம் பிரித்ததாக என் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. அந்த சமயத்தில் நான் பாகபிரிவினை செய்தவர்களுடன் இல்லை. நான் சொல்லியுள்ள பாகபிரிவினையில் இவ்வழக்கில் உள்ள தரப்பினர்களுக்கு யார் யாருக்கு எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரனத்தில் பாகம் பிரிந்துள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதேபோல் மேற்படி பாகபிரிவினையில் எந்தெந்த சொத்துக்கள் விடப்பட்டன என்பது குறித்து எனக்கு தெரியாது.

12) என் பிரமாண பத்திரிக்கையில் தரப்பினர்களுக்கு பரம்பரை சொத்துக்கள் அல்லாமல் சுமார் 65 செண்ட் நிலம் இருப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 65 செண்ட் நிலம் யார் பெயரில் உள்ளது என்றால், அய்யம்மாள் பெயரில் உள்ளது. மேற்படி 65 செண்ட் நிலத்திற்குரிய பத்திரத்தையோ, வருவாய்துறை ஆவணங்களையோ ஏதேனும் நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி நிலத்திற்குரிய பட்டா எண், சர்வே எண் மற்றும் அதன் செக்குபந்தி விவரங்கள் ஆகியவை குறித்து எனக்கு தெரியாது.

13) மேற்படி 65 செண்ட் நிலத்தை யார் யாருக்கு எழுதி வைத்தார்கள் என சொல்லியுள்ளேன் என்றால், அய்யம்மாள் தனது மகள் 3ம் பிரதிவாதியான மைலிக்கு

உயில் எழுதி வைத்ததாக நான் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். மேற்படி உயில் எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்றால், 2005ம் வருடத்தில் எழுதப்பட்டது. தேதி, மாதம் எனக்கு தெரியாது. மேற்படி உயிலில் நான் சாட்சி கையெழுத்து இடவில்லை. மேற்படி உயிலை நான் படித்து பார்த்ததில்லை.

14) அய்யம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்றால், தேதி எனக்கு சரியாக தெரியாது. இறந்து சுமார் 10 வருடங்களுக்குள் இருக்கும். என் பிரமாண வாக்குமூலத்தில் அய்யம்மாள் இறந்து 10 வருடங்களுக்குள் தான் இருக்கும் என நான் சொல்லியுள்ளேன்.

15) மேற்படி 65 செண்ட் நிலத்திற்கு தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என எனக்கு தெரியாது. நான் என் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்யும் காலத்திலும் மேற்படி நிலத்திற்கு பட்டா யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியாது.

16) இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டுதான் அய்யம்மாள் இறந்தார். நான் சொல்லும் உயில் இந்த வழக்கிற்கு முன்பு எழுதப்பட்டதா? அல்லது இந்த வழக்கிற்கு பின்பு எழுதப்பட்டதா? என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

17) 3ம் பிரதிவாதியான மைலியிடமிருந்து பெரமகவுண்டரும், வையாபுரியும் மேற்படி 65 செண்ட் நிலத்தை பொறுத்து கிரயம் பெற்றனர் என்று நான் சொல்லியுள்ள நிலையில், எந்த வருடத்தில் கிரயம் பெற்றனர் என்றால், 2012ம் வருடத்தில் கிரயம் செய்ததாக நான் கேள்விப்பட்டேன். எனக்கு நேரடியாக அதுபற்றி தெரியாது.

18) மேற்படி கிரய ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என எனக்கு தெரியாது. எவ்வளவு தொகைக்கு கிரயம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், ஒரு லட்சத்து ஒன்பதாயிரத்துக்கு கிரயம் கொடுத்ததாக மேற்படி பெரமகவுண்டரும், வையாபுரியும் சொல்லி நான் கேள்விப்பட்டேன்.

19) மேற்படி 65 செண்ட் நிலம் இன்றளவும் கூட்டு குடும்ப சொத்தாக அனுபவித்து வருகிறார்கள் என்றால், இல்லை. பெரமகவுண்டர் தான் விவசாயம் செய்து வருகிறார். நான் சொல்வது தவறானது என்றாலும், இன்றும் கூட்டாக தான் உள்ளது என்றால், சரியல்ல.

20) குப்பண்ண கவுண்டரின் குடும்பத்திற்கு பூர்வீக வழியில் மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் பாத்தியம் என்பது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு பிரதிவாதிகள் குடும்பத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் தாவா சொத்து அமைந்துள்ள பகுதியிலேயே வசிக்கவில்லை என்றாலும், வையாபுரியும், நானும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு சாதகமாக எனக்கு தெரியாத சங்கதிகளை தெரிந்ததுபோல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.